## சபரகமுவ மாகாண சபை – 2020 ஆண்டு

------------------------------------------------------------

## 1 நிதிக்கூற்றுக்கள்

----------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

சபரகமுவ மாகாண சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 23(1) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2021 நவம்பர் 16 ஆம் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 22 ஆம் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியொன்று 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு பிரகாரம் மாகாண சபையில் முன்வைக்க ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து சபரகமுவ மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபரகமுவ மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருமான குறியீடுகளிற்காக மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய வருமானம் | கிடைக்க வேண்டிய வருமானத்தை இனங்காணும் போது ஏற்பட்டுள்ள தாமதத் | 2021 ஆண்டு நிதிக்கூற்று தயாரிக்கும் போது தவறை |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகை ரூபா 68,145,975 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | தவறாகும். 2021 ஆண்டு நிதிக்கூற்று சமர்பிக்கும் போது சீராக்க குறித்துக் கொண்டேன். | சரிசெய்ய வேண்டும். |
| (ஆ) | நிதிநிலைமை கூற்றில் 2020 திசெம்பர் 31 திகதியன்று இயந்திர உபகரண பெறுமதி ரூபா 40,525,000 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2021 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் குறைவடைந்த இயந்திர உபகரணங்களின் பெறுமதியை உள்ளடக்க வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மூலதன மானியமாக கிடைத்த மொத்த பெறுமதியான ரூபா 2,133,500,000 மற்றும் மூலதன செலவாக (மாகாண முதலீட்டு செலவு) மேற்கொண்ட ரூபா 993,635,356 ஆன மொத்த செலவை நிதி செயலாற்றல் கூற்றிற்கு எடுத்துள்ள காரணத்தால் மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்ட ரூபா 720,484,435 ஆன நிலையான சொத்து பெறுமதியும் அதனுள் உள்ளடங்கியிருந்தது. | சாதாரண கணக்கீட்டு செயன்முறையினுள் அனைத்து மானியங்களும் காட்டப்பட்டுள்ளதுடன், நிலையான சொத்து கொள்வனவு செயன்முறையாகையால் செயலாற்றுகை பகுதியாக நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக சரியாகவும் மற்றும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையீட்டு செயற்பாடு தொடர்பான பொறுப்பு, மாகாண திறைசேரி உள்ளிட்ட அவ் அவ் நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) உபபிரிவின் பிரகாரம் சபரகமுவ மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வின் பிரகாரம் கணக்காய்வு என்னால் செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல மோசடி ஏற்பட காரணமாகும்.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டுமாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளில் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 804 – பிரதான செயலாளர்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டிற்காக சமர்பிக்கப்பட்ட வருமான கணக்கு பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய நிலுவை வருமானம் ரூபா 75,685,652 ஆனதுடன், மீளாய்வாண்டினுள் அந் நிலுவையிலிருந்து ரூபா 14,058,895 தொகை அதாவது 19 சதவீதம் மாத்திரம் திரட்டப்பட்டிருந்தது. | தொற்று நோய் நிலைமை காரணமாக நிலுவை வருமானம் அறவிடும் செயன்முறையை ஒழுங்காக செயற்படுத்த முடியாது போனது. | நிலுவை வருமானம் அறவிடும் செயன்முறையை வினைத்திறனாக பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | காணி ஆணையாளரின் 1996 ஆகஸ்ட் 01 திகதிய 96/5 கொண்ட சுற்றறிக்கையின் 6.1 பந்தி பிரகாரம் வருடாந்த காணி குத்தகை பணம் ஏதேனும் ஒரு வருடத்தில் ஜனவரி 01 திகதி அல்லது அதற்கு முன்னர் அறவிட வேண்டிய போதும் இரத்தினபுரி மாவட்டத்தில் 17 பிரதேச செயலகங்களில் 2020 திசெம்பர் 31 | கொடுப்பனவை புறக்கணித்துள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து குத்தகை அறவிடவும் குத்தகை செலுத்த தொடர்ந்தும் புறக்கணிப்பின் காணியின் உடமையை மீள்சுவீகரிக்கவும் | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட்டு நிலுவை குத்தகை பணத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியன்று கூட்டுத் தொகை ரூபா 35,430,569 ஆன வருடாந்த குத்தகை பணம் மற்றும் ரூபா 8,270,056 ஆன தண்டப் பணம் நாளாதுவரையாக அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அச் சுற்றறிக்கையின் 7(1) பந்தி பிரகாரம் குத்தகை செலுத்துதலை புறக்கணித்துள்ள சந்தர்ப்பங்களில் காணியின் உடமையை மீள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே, குறித்த சுற்றறிக்கையின் 6.11 பந்தி பிரகாரம் இரத்தினபுரி மாவட்டத்தில் 03 பிரதேச செயலகங்களில் மற்றும் கேகாலை மாவட்டத்தில் 03 பிரதேச செயலகங்களில் 2020 திசெம்பர் 31 திகதியன்று கூட்டுத்தொகை ரூபா 7,159,607 ஆன நிலுவை நீண்ட கால குத்தகை பணம் மற்றும் தண்டப்பணத்தை நாளாதுவரையாக அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 1.5.2 தலைப்பு 808 – பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபரகமுவ மாகாண சபைக்காக மலசலகூட தொகுதி நிர்மாண வேலையின் தொழிநுட்ப ஆய்வுக் குழு உறுப்பினர்களை நியமிக்கும் போது 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.4(இ) மற்றும் (ஈ) வழிகாட்டிகளிற்கு மாற்றமாக சுற்றாடல் நிபுணர் ஒருவர் மற்றும் பெறுகை நிறுவன வெளி அலுவலர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொழில் ரீதியான பொறியியலாளர்களுக்கு சுற்றாடல் தேவைப்பாடுகள் தொடர்பான தெளிவொன்று உள்ளதுடன் வெளி உறுப்பினர் ஒருவராக இரத்தினபுரி நிறைவேற்று பொறியியலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை சரியாக பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொறியியளார் (சிவில்) II/III உயர் மட்ட 04 வெற்றிடங்களும் தொழிநுட்ப உத்தியோகத்தர் விஷேட சேவை 01 பதவி, திட்டமிடல் களைஞர் விஷேட தரத்தில் 04 பதவிகள் உள்ளிட்ட மூன்றாம் நிலை 09 வெற்றிடங்கள் மற்றும், தொழிநுட்ப உத்தியோகத்தர் (I/II/III) 48 வெற்றிடங்கள் உள்ளடங்களாக மீளாய்வாண்டு இறுதியில் 97 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் தொடர்பாக பிரதான செயலாளர் ஊடாக அரச சேவை ஆணைக்குழுவிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டும். |

## 1.5.3 தலைப்பு 809 – மாகாண வருமான திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் 09 ஆவது அட்டவணையின் முதலாம் பட்டியலில் 36.12 இன் கீழ் மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்ட மற்றும் 1995 பெப்ரவரி 20 திகதிய அங்கீகாரம் கிடைத்த, சபரகமுவ மாகாண சபையின் 1994 இலக்கம் 10 கொண்ட நிதி (மீள்நிரப்பு ஏற்பாடு) பிரகடனத்தின் viii ஆவது அத்தியாயத்தின் 13 பிரிவின் பிரகாரம் கால்நடை மற்றும் தாவர பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணமாக உடவளவ தேசிய பூங்காவின் உட்பிரவேச கட்டணம் சபரகமுவ மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டும். அவ்வாறே வனசீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளரின் இலக்கம் வசீ/2/11/2 மற்றும் 2002 ஜுன் 26 திகதிய கடிதமூடாக 2001 ஒக்டோபர் முதல் உடவளவ பூங்கா கட்டணத்திலிருந்து வனசீவராசிகள் | இது தொடர்பாக சுற்றாடல் அமைச்சு, வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சை அறிவூட்டியுள்ளதுடன், மாகாண சபை சட்ட பிரிவுடன் கலந்துரையாடி முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாக. | பூங்காவின் உட்பிரவேச கட்டணம் வாராந்தம் சபரகமுவ மாகாண நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளவும் 2001 ஆண்டு முதல் நிலுவையாகவுள்ள பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் 50 சதவீதம் தவிர மீதியின் 40 சதவீதம் சபரகமுவ மாகாண சபைக்கு செலவு வைப்பதாகவும் அப் பணம் திறைசேறியால் மாகாண சபைக்கு அனுப்புவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயினும் 2001 ஒக்டோபர் முதல் 2007 நவம்பர் வரையான காலத்திற்குரிய ரூபா 24,956,756 மற்றும் 2007 திசெம்பர் முதல் 2020 திசெம்பர் 31 வரை அறவிட வேண்டிய பணத்தை வனசீவராசிகள் திணைக்களத்தினால் அல்லது திறைசேறியினால் மாகாண சபைக்கு வழங்கியிருக்கவில்லை.

**1.5.4 தலைப்பு 810 – நீதி மற்றும் சமாதனம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதாரம், சுதேச வைத்தியம், பெண்கள் விவகாரம், கூட்டுறவு, வியாபாரம் மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், செய்திகள், வீடு மற்றும் நிர்மாணம் மற்றும் சமய விவகாரம் அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் கையியந்திரம் மூலம் புடவை உற்பத்தியை விரிவாக்கவும் கிராமிய பெண்களுக்கு வேளைவாய்ப்பை உருவாக்கும் நோக்கில் 2017 ஆண்டில் ரூபா 9,219,299 செலவில் கேகாலை நெசவுக் கைத்தொழில் கட்டிடத்தின் மேல் மாடியை நிர்மாணித்து வ/ப கேகாலை நெசவுத் தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு 2017 திசெம்பர் 25 திகதி ஒப்படைத்திருந்த போதும் அக் கட்டிடம் 02 வருடங்களாக பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன், அச் சங்கத்தினால் 2020 ஜனவரி 01 திகதி முதல் தனியார் சர்வதேச பாடசாலையொன்றிற்கு | புடவை உற்பத்திக்கு தேவையான சக்திவாந்த இயந்திர கொள்வனவிற்கு போதிய நிதிப் பலம் கூட்டுறவு சங்கத்திற்கு இல்லாததால் அந் நடவடிக்கை தாமதித்துள்ளது. கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் கடன் நிதி உதவியின் கீழ் இயந்திரம் கொள்வனவு செய்ய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் | i. வ/ப கேகாலை நெசவுத் தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு இதனை செயற்படுத்த முடியாமைக்கு காரணம் கோரி ஏதேனும் அலுவளரின் தவறு ஏற்பட்டிருப்பின் அவ் அலுவளரிற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மேல் குறிப்பிடும் செலவில் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. | கோரப்பட்டுள்ளது. | ii. தாமதமின்றி அக் கட்டிடத்தை அமைச்சின் எதிர்பார்த்த செயற்பாட்டிற்காக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2020 மே 20 திகதிய இலக்கம் அவிஅ/178102001 கொண்ட விஷேட உள்ளக கணக்காய்வு அறிக்கை பிரகாரம் அபிவிருத்தி ஆக்கம் மற்றும் இயந்திரஉபகரண ஆணைக் குழுவின் நிதி மோசடிகள்/ஒழுங்கீனம் உள்ளிட்ட நிதி ஒழுக்கம் மீரப்படல் மற்றும் நிர்வாக கட்டமைப்பில் பலவீனங்களை அவதானித்து பொருத்தமான பரிந்துரைகளை முன்வைக்கப்பட்டிருந்த போதும் 2021 மார்ச் வரை அப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் அப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துகிறேன். | உள்ளக கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | சபரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதிக்காக மீளாய்வாண்டில் ரூபா 32,775,000 செலவிட்டு சூரிய மின் உற்பத்தித் தொகுதியொன்றை வழங்கி பொருத்த செயற்படுத்தும் செயற்திட்டத்தின் விலை மணு ஆய்வின் போது 02 உதிரிப்பாகங்களுக்குரிய 15 அளவுத் திட்டங்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டிருக்கவில்லை. | அனைத்து அளவுத் திட்டங்களும் இலங்கை சூரிய வலுசக்தி ஆணைக்குழுவினால் பரிசோதித்து உபகரணங்கள் இறக்குமதிக்கு அங்கீகாரம் வழங்கப்படுவதுடன், இந்த உருப்படிகளுக்காக அவ் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | தொழிநுட்ப ஆய்வுக் குழுவினால் விலை மணு பதிவேடுகளில் குறிப்பிடப்படும் அனைத்து அளவுத் திட்டங்களையும் மதிக்க வேண்டும். |

### 1.5.4.1 வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கேகாலை, கரவனள்ள, யடியன்தொட்ட, புலத்கொஹுபிடிய மற்றும் தெறநியகல பேரூந்து தரிப்பிட கடையறைகளை குத்தகைக்கு வழங்கும் போது உடன்படிக்கை கைச்சாத்திடாது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தமை, உடன்படிக்கை கைச்சாத்திட்ட கடையறைகளிலிருந்து குறைந்த குத்தகை வாடகை அறவிடப்படல் மற்றும் உடன்படிக்கை இரத்தான கடையறைகளை மீண்டும் குத்தகைக்கு வழங்காத காரணத்தால் கூட்டுத் தொகை ரூபா 3,550,300 அதிகார சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | நிலுவை பணத்தை அறிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அவதானிப்பில் குறிப்பிடப்படும் அனைத்து குறைகளையும் சரிசெய்ய வேண்டும். |

### 1.5.4.2 அபிவிருத்தி ஆக்கம் மற்றும் இயந்திர உபகரணங்கள் அதிகார சபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஜய்கா மாகாண வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 29,900,000 ஆன 02 முற்கலவை பரப்பும் உற்பத்தி இயந்திரங்கள் 2015 ஆண்டு அதிகார சபைக்கு கிடைத்திருந்ததுடன், இவ் இயந்திரங்களை பொறுப்பேற்ற திகதி முதல் பயன்படுத்தியிருக்காததுடன், 2021 ஏப்ரல் 09 திகதியளவில் இவ் இயந்திரங்களை உரியமுறையில் பராமரிக்காததால் அழிவடைந்து காணப்பட்டன. மேலும் இவ் இயந்திரங்களில் பாதுகாப்பிற்கு ஈடுபடுத்திய மூன்று காவளர்களிற்காக | இவ்வியந்திரங்களால் அதிகார சபைக்கு வினைத்திறனான பயன்களை பெற்றுக்கொள்ள முடியாததாகவும் காவளர்களுக்கு செலுத்தும் சம்பளம் பயனற்றது எனவும் பிரதான செயலாளர் மற்றும் ஆளுனரை தொடர்ந்தும் அறிவூட்டப்பட்டுள்ளனர். | பயன்பாட்டிற்கு எடுக்க அல்லது அவ்வாறு செய்ய முடியாதெனின் பராதீனம் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் ரூபா 699,100 ஆன சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பிரதான அலுவலகத்தினால் கேகாலை உப அலுவலகத்திற்கு சொந்தமாக காணப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்ட 02 இயந்திர உபகரணங்கள் 2021 ஜனவரி 11 திகதி பௌதீகரீதியாக அல்லது எழுத்து மூலம் கேகாலை உப அலுவலகத்தில் காணப்படுவதாக கணக்காய்விற்கு உருதி செய்திருக்கவில்லை. | ப்ளேட் வைப்ரேட்டர் இயந்திரம் தொடர்பாக குழுவொன்றின் மூலம் கண்டறிந்து எதிர்காலத்தில் அறிக்கையொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். | தாமதமின்றி நி.பி 104 பிரகாரம் பரிசோதனையொன்றை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.5 தலைப்பு 811 – சுகாதார திணைக்களம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சிக் வைத்திய வழங்கல் பிரிவினால் செயற்படுத்தும் பிரதேச சுகாதார சேவைகளில் வைத்திய வழங்கல் முகாமைத்துவத்தின் செயற்திறனை மற்றும் பயனுறுதியை மேன்படுத்தும் நோக்கில் வைத்திய வழங்கல் முகாமைத்துவ தகவல் தொகுதியின் ஆரம்ப கட்டத்தின் கீழ் 2019 ஆண்டு இறுதியில் வைத்திய வழங்கல் பிரிவினால் சபரகமுவ மாகாணத்தில் 33 சுகாதார நிறுவனங்களிற்கு 118 கணனிகள் மற்றும் 37 அச்சுப்பொறிகள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 24 சுகாதார நிறுவனங்களிற்கு வழங்கியிருந்த 86 கணனிகளிற்கு மேற்குறிப்பிட்ட முகாமைத்துவ தகவல் தொகுதியிற்கு தேவையான மென்பொருட்களை நிருவியிருக்காத காரணத்தால் 2021 பெப்ரவரி | இத் தகவல் தொகுதி தொடர்பில் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தினால் பயிற்சிக்குரிய அலுவலர்களை அனுப்புவது மாத்திரம் இடம்பெறுவதுடன், கணனி இயந்திரம் மற்றும் மென்பொருள் வழங்கல் வைத்திய வழங்கல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. அதனால் இயந்திரம் வழங்கல், மென்பொருள் இஸ்தாபித்தல் மற்றும் அலுவலர்களை பயிற்றுவிப்பது மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட | வைத்திய வழங்கல் பிரிவுடன் தொடர்புபட்டு கருத்திட்டத்தை வெற்றிகரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவிலும் அக் கணனிகள் எதிர்பார்த்த நோக்கத்திற்காக பயன்படுத்த முடியாதிருந்தன. | ஒன்றாகும் என சுட்டிக் காட்டுகிறேன். | |
| (ஆ) | 2020 ஆண்டினுள் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தினால் கூட்டுத் தொகை ரூபா 13,451,196 செலவில் 17 நிறுவனங்களில் காணப்பட்ட ஒரே மாதிரியான நிர்மாணம் / திருத்த வேலைகளை சிறிய 95 பிரிவுகளாக வேறாக இனங்கண்டு மேற்கொண்டிருந்ததாக 21 நிறுவனங்களிற்குரிய நிர்மாணம் / திருத்த வேலைகளின் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அங்கு பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க விலை மனு கோரி ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படாது பிரதேச சுகாதார சேவை பணிப்பாளரின் அல்லது குறித்த நிறுவன தலைவரின் பரிந்துரையின் பெயரில் தெரிவு செய்யப்பட்ட நபர்களைக் கொண்டு குறித்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1(அ) வழிகாட்டி பிரகாரம் அரசிற்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த கிரய நன்மைகள் இழக்கப்பட்டுள்ளதாகவும், 1.2.1 (இ) வழிகாட்டி பிரகாரம் தகைமையுடன், ஆர்வமுள்ள தரப்பினருக்கு பெறுகை நடைமுறையிற்கு சமுகமளிக்க சமமான மற்றும் உச்ச சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | திருத்த வேலைகளிற்கு முன்னர் அதற்குரிய உழைப்பு நாள் மதிப்பீட்டிற்கு மாகாண பொறியியலாளரின் பரிந்துரை பெறப்படும். நாள் அடிப்படையில் ஊழியர்கள் பெற்றுக்கொள்ளல் இடம்பெறும். பரிந்துரைத்த நாட்களிற்கு மேலதிகமாக கொடுப்பனவு மேற்கொள்வதில்லை என அறிவிக்கிறேன். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் அரசிற்கு உச்ச கிரய நன்மைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஒப்பந்தங்கள் ஒப்படைத்தல் மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 ஆண்டில் பிரதான அமைச்சினால் ரூபா 137,450,000 செலவில் 02 CT Scanner இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இவ் இயந்திரங்களின் உத்தரவாத காலத்தினுள் பராமரிப்பு மற்றும் சேவைகள் இலவசமாக இடம்பெற வேண்டிய போதும், அக்காலம் உள்ளடங்களாக அவ்வியந்திரங்களை பணம் செலுத்தி சேவை மேற்கொள்ள வழங்குனருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், எம்பிலிபிடிய வைத்தியசாலையில் நிருவியுள்ள இயந்திரத்தை 2019 ஆண்டினுள் மேற்கொண்ட சேவைக்காக மீளாய்வாண்டில் ரூபா 4,981,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், உடன்படிக்கையின் 4.7.2 பிரிவு பிரகாரம் இவ்வியந்திரத்தை ஆண்டிற்கு 04 முறைகள் சேவையிட வேண்டிய போதும், உடன்படிக்கை காலத்தினுள் 02 முறைகள் மாத்திரம் சேவையிடப்பட்டிருந்தன. 2020 ஏப்ரல் 30 திகதியுடன் உத்தரவாத காலம் முடிவடைந்திருந்ததுடன், அதன் பின்னர் சேவை மேற்கொள்ள உடன்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் 02 இயந்திரங்களிற்கும் எவ்வித சேவையிடலும் மேற்கொண்டிருக்கவில்லை. | உத்தரவாத காலத்தினுள் கொடுப்பனவு செய்த பணத்தை அறவிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். | சேவை உடன்படிக்கையை புதுப்பிக்கவும் உத்தரவாத காலத்தினுள் செலுத்திய பணத்தை அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மாகாண சுகாதார துறையில் அங்கீகார ஆளணியை அதன் உள்ளவாறான ஆளணியுடன் ஒப்பிடுகையில் 20 பதவிகளிற்குரிய சில வைத்திய சாலைகள், சுகாதார வைத்திய அலுவலர் அலுவளகம் போன்ற நிறுவனங்களில் மிகை காணப்படுகையில் இன்னும் | காணப்படும் அங்கீகார எண்ணிக்கைக்கு மேலதிகமாக சேவையின் தேவைப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், அதற்காக அங்கீகார எண்ணிக்கையை அதிகரித்து தருமாறு கோரி அவ்வங்கீகாரம் கிடைக்கும் | நிறுவனங்களிற்கு இடையில் ஆளணியை சமநிலையாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களில் அப்பதவிகளிற்குரிய வெற்றிடங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம், இந்நிலைமை மாகாண சுகாதார சேவையின் செயலாற்றளிற்கு பாதகமான தாக்கம் செலுத்த முடியுமென அவதானிக்கப்படுகிறது. | வரை புதிய பௌதீக வளங்களிலிருந்து உச்ச சேவைகளை பெற்றுக் கொள்ள சேவை தேவைப்பாடு நிலவும் நிறுவனங்களிற்கு அங்கீகார எண்ணிக்கையை விஞ்சி இணைப்பு செய்தல் மேற்கொள்ள ஏற்பட்டுள்ளது. | |

## 1.5.6 தலைப்பு 812 – ஆயுர்வேத திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆயுர்வேத திணைக்களத்தினால் வருடாந்தம் உலர் மூலிகை மருந்துகளின் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்ய உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உலர் மருந்துகளிற்காக 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் முறையே ரூபா 6,809,885 தொகை ரூபா 14,036,825 தொகை மற்றும் ரூபா 11,172,783 தொகையாக செலவிட்டு வெளி வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், ஆயுர்வேத திணைக்களத்திற்கு உரிய 23 நிறுவனங்கள் அமைந்துள்ள காணிகளில் மூலிகை மருந்துகளை பயிரிட முடியுமான காணிகளின் அளவு 09 ஹெக்டயரைவிட அதிகமாவதுடன், அக்காணிகளில் மூலிகை மருந்துளை பயிரிடலை மேம்படுத்தி மூலிகை மருந்துகளின் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | காணிகளில் பயிரிட தொழிலாளர் ஊதியம் குறைவாகையால் ஆளணியை அதிகரித்து தருமாறு முகாமைத்துவ திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ள போதும், இது வரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளில் மூலிகை மருந்துகளை பயிரிட முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்தப்பட்டுள்ளது.. | காணப்படும் காணிகளை பயன்படுத்தி உள்நாட்டு மூலிகை மருந்து பயிரிடளை ஆரம்பிப்பது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியளவில் ஆயுர்வேத திணைக்களத்தின் உயர் மட்ட 06 பதவிகளில் 27 வெற்றிடங்களும் மற்றும் ஏனைய 21 பதவிகளில் 189 வெற்றிடங்களும் நிலவியதுடன், அதனுள் உதவி/பிரதி ஆணையாளர் ஒருவர், 11 ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள், 12 (சம்பிரதாய) நிபுணத்துவ ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள், 01 நிர்வாக உத்தியோகத்தர், 34 தாதி அலுவலர்கள், 10 மருந்தாளரகள் மற்றும் 41 பராமரிப்பாளர்கள் உள்ளடங்குகின்றனர். மேலும் அங்கீகார ஆளணி எண்ணிக்கையை விஞ்சி 15 சாதாரண தொழிலாளர்கள் மற்றும் 70 சுகாதார தொழிலாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | இப் பதவிகளை நிரப்பித் தருமாறு மத்திய அரசை மற்றும் மாகாண அரச சேவை ஆணைக்குழு அறிவூட்டப்பட்டுள்ளன. PL-2 குழுவின் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதுடன் இம் மிகை தீர்ந்து போகும். | வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |

### 1.5.7 தலைப்பு 813 – கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு பிரகடனத்தின் 44(i) பிரிவு பிரகாரம் ஒவ்வொறு ஆண்டும் ஒரு முறையேனும் அனைத்து பதிவு செய்யப்பட்ட சங்கங்களும் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய போதும், செயற்படும் 243 சங்கங்களில் 2019 ஆண்டிற்காக 128 சங்கங்களின் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் 35 சங்சங்கள் 2019 ஆண்டிற்காக கணக்காய்வாளரை நியமித்திருக்கவில்லை. அவ்வாறே 2019 ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளிலும் கணக்காய்வு மேற்கொள்ளாத 59 சங்கங்கள் காணப்பட்டதுடன், அவற்றுள் சில | 59 சங்கங்களில், சில சங்கங்களின் கணக்காய்வு மேற்கொள்ளப்படுவதுடன், இன்னும் சில சங்கங்களின் கணக்காய்வு முடிவடைந்து அறிக்கை நிறுவனத்திற்கு கிடைக்கவுள்ளன. அவவாறே இன்னும் சில சங்கங்களின் கணக்காய்விற்காக அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய சங்கங்களின் கணக்காய்வை 2021 ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. | பிரகடன ஏற்பாடுகள் பிரகாரம் காலரீதியாக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| சங்கங்கள் 2012 ஆண்டு முதல் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) கூட்டுறவு சங்கங்களின் பிரச்சினைகளை தீர்க்க சங்கத்தினால் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு தீர்வுக் கட்டணமாக செலுத்துகின்ற தொகையிலிருந்து பிரச்சினைகளை தீர்ப்பதற்கான செலவுகளை மேற்கொண்ட பின்னர் எஞ்சுகின்ற பணத்தை குறித்த சங்கத்திற்கு மீள் அனுப்பாது தீர்வுக் கட்டணத்தை வங்கிக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், இக்கணக்கு மீதியின் பெறும்பகுதி அக் கட்டணங்களுடன் கூடியதாகும். அதன் பிரகாரம் தீர்வுக் கட்டணம் வங்கிக் கணக்கின் 2020 திசெம்பர் 31 திகதிக்கு வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 23,152,335 ஆனதுடன், அதற்கு மேலதிகமாக ரூபா 30,898,997 தொகை உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பெயரில் 06 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | பிரச்சினைகளை தீர்க்க சங்கத்தினால் அனுப்பும் பணத்திலிருந்து கொடுப்பனவு செய்த பின்னர் ஏதேனும் பணம் எஞ்சியிருக்க முடியும். அதனை மீண்டும் சங்கங்களிற்கு வழங்கப்படாததுடன், அப் பணம் தீர்வு நிதியத்தில் காணப்படுகின்றது. | மீதிப் பணத்தை குறித்த சங்கங்களிற்கு செலுத்த முறைமையை தயாரிக்க வேண்டும். |

## 1.5.8 தலைப்பு 814 – உள்ளூராட்சி திணைக்களம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபரகமுவ மாகாணத்தில் 29 உள்ளூராட்சி நிறுவனங்களின் 13 இல் முறையான கழிவுப் பொருள் முகாமை செயன்முறை செயற்படுத்தப்படாததால் உள்ளூராட்சி திணைக்களத்தின் ‘‘அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களிலும் முறையான கழிவுப் | கழிவுப் பொருள் முகாமை மத்திய நிலையமொன்று இருக்கின்ர மற்றும் இல்லாத போதும் உள்ளூராட்சி நிறுவனங்களினால் தற்போது முறையான கழிவு முகாமை செயன்முறையொன்று | கழிவுப் பொருள் முகாமை தொடர்பாக திணைக்களத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| பொருள் முகாமை செயன்முறை செயற்படுத்தப்படுவதாக உருதி செய்தல்'' எனும் நோக்கம் நிரைவேறியிருக்கவில்லை. | செயற்படுத்தப்படுகின்றது. | வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 820 – மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்தி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

-----------------------------------------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பின்னவல ஹோட்டல் பாடசாலைக்கு உடன்பட்ட பெறுமதி ரூபா 125,267,510 ஆன நான்கு மாடி கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் வேலைக்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.1.1 (அ) பந்தி பிரகாரம் பெறுகைகள் நடைமுறையை செயற்திறனுடன் திட்டமிடாததால் 06 சந்தர்ப்பங்களில் 07 கால நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. | நிர்மாணம் மேற்கொள்கையில் வேலைத்தள பரிசோதனையின் போது தேவைப்படும் ஒரு சில மாற்றங்களை மேற்கொண்டமையும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக மின் இணைப்பை பெற்றுக் கொள்ள தாமதித்தன் காரணமாகவும் இத் தாமதம் ஏற்பட்டுள்ளது. | திட்டம் தயாரிக்கையில் தேவைப்பாட்டை தெளிவாக இனங்கண்டு அதற்காக உரிய அலகுகளின் ஒருமைப்பாட்டை பெற்று நிர்மாணத்தை ஆரம்பிக்க வேண்டும். |
| (ஆ) | குறித்த ஹோட்டல் பாடசாலையை நிர்மாணிக்கும் காணியில் இருந்த சபரகமுவ மாகாண விவிசாய திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சிய அறை மற்றும் ஊர்திச்சாலையை உடைத்து அகற்றி மீண்டும் நிர்மாணித்திருந்ததுடன் இந் நிர்மாணத்திற்காக பெறுகைகள் நடைமுறையை பின்பற்றாது ரூபா 3,298,064 பெறுமதிக்கு ஹோட்டல் பாடசாலையை நிர்மாணிக்கும் ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திட 2016 ஆகஸ்ட் 31 திகதிய மாகாண வீதி அமைச்சின் பெறுகைகள் குழு தீர்மாணித்திருந்ததுடன் அந் நிர்மாணத்திற்காக ரூபா 2,927,585 செலுத்தப்பட்டிருந்தது. | சபரகமுவ மாகாண பிரதான செயலாளரின் இலக்கம் சீஎஸ்/08 மற்றும் 2016.08.24 திகதிய கடிதம் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், அமைச்சினால் பெறுகைகள் தீர்மாணம் எடுத்து கருத்திட்டத்தினுள் ஏற்பாடு செய்துள்ள நிச்சயமற்ற ஒதுக்கீட்டு எல்லையினுள் இந் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அனைத்து நிர்மாண தேவைப்பாடுகளையும் இனங்கண்டு ஆரம்ப மதிப்பீட்டை தயாரித்து அதன் பிரகாரம் பெறுகைகள் நடைமுறையை பின்பற்ற வேண்டும். |

## 1.5.10 தலைப்பு 830 – சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் கைத்தொழில் அமைச்சினால் கிராம கைத்தொழிலிற்காக தேவையான சக்திவாய்ந்த கைஇயந்திரங்களை கொள்வனவு செய்ய ரூபா 4,500,000 தொகை 2020 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் ஒதுக்கியிருந்த போதும் மீளாய்வாண்டினுள் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு தேவையான சக்திவாய்ந்த உபகரணங்களை கொள்வனவு செய்யும் செயற்பாட்டை மேற்கொண்டிருக்கவில்லை. | செயற்பாடுகளை ஒப்படைத்தன் பின்னரும் நிர்மாண பணிகளை மேற்கொள்ள குறைந்தபட்சம் 06 மாதமளவு காலம் செலவாவதால் போதிய காலமொன்று இல்லாததன் காரணமாக செயற்பாடுகளை கைவிட நேர்ந்தது. | திட்டமிட்ட பிரகாரம் செயற்பாடுகளை மேற்கொள்ள பொறுப்பேற்க வேண்டும். |
| (ஆ) | கைத்தொழில் அமைச்சினால் ஹொரேபொல மற்றும் ஹிங்குரஆர கிராமங்களில் 25 பயன்பாட்டாளர்களுக்கு வேலைத்தளத்தை தயாரிக்க ரூபா 1,278,183 பெறுமதியான பொருள் உதவி வழங்கப்பட்டிருந்தது. 2021 பெப்ரவரி 03 திகதி வேலைத்தள பௌதீக பரிசோதனையின் போது 17 பயன்பாட்டாளர்களிற்கிடையில் 10 நபர்களுக்காக வழங்கியிருந்த ரூபா 555,005 பெறுமதியான பொருள் உதவியை பயன்படுத்தி வேலைதளங்களை தயாரித்திருக்காததுடன் பொருள் உதவி வழங்கி ஓராண்டு காலம் கடந்திருந்த போதும் வேலைத்தளத்தை தயாரித்து அவ்வேலைத்தளத்தில் கைத்தொழிலை செயற்படுத்தியிருக்கவில்லை. | வேலைத்தளத்தை நிர்மாணிக்காத கைத்தொழிலாளர்களுக்கு அத்தளங்களை விரைவில் நிர்மாணித்துக் கொள்ளுமாறு தேசிய நிபுண சபை மாவட்ட உத்தியோகத்தருடன் இணைந்து அறிவூட்டியுள்ளதுடன் அவர்கள் அதற்காக இணங்கியுள்ளனர். | கருத்திட்டம் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் உரிய மேற்பார்வை மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.10.1 கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 இலக்கம் 14 கொண்ட சபரகமுவ மாகாண சபையின் கைதொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பிரகடனத்தின் 14 பிரிவில் குறிப்பிடப்படும் கைத்தொழிற் துறையில் அபிவிருத்திக்குரிய அதிகாரம் மற்றும் 07 செயற்பாடுகளை நடைமுறைபடுத்தி இருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்தி இவ்வதிகாரம் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த இணங்குகிறேன். | அதிகாரம் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைபடுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 19,692,264 ஆன வியாபார கடன்படுனர்களில் கூட்டுத்தொகை ரூபா 1,549,130 ஆன 18 கடன்படுனர் மீதிகள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாகவும் கூட்டுத்தொகை ரூபா 565,268 ஆன 07 கடன்படுனர் மீதிகள் 10 ஆண்டுகளிற்கும் அதிக காலமாகவும் நிலுவையாக உள்ளன. | தற்போது கடனை அறவிட கடன்படுனர்களுக்கு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அனைத்து கடன்படுனர்களிடமிருந்தும் கடன் தொகையை அறவிடவும் கடனை செலுத்தாத கடன்படுனர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் செயற்படுகிறேன். | நிலுவை கடன்படுனர் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.11 தலைப்பு 831 – கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 03 தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிகள், 16 ஆலோசகர் பதவிகள் மற்றும் 14 காவளர் பதவிகள் உள்ளடங்களாக 38 வெற்றிடங்கள் நிலவியதுடன் அங்கீகரித்துக் கொள்ளாது ஒட்டுவேலை பதவிக்காக ஒரு ஊழியர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். | எதிர்காலத்தில் பலநோக்கு வேலைத் திட்டத்தின் கீழ் வெற்றிடங்களை நிரப்ப அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.12 தலைப்பு 832 – நன்நடத்தை, குழந்தை பாதுகாப்பு மற்றும் சமூக சேவைத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒரு உதவி நன்நடத்தை ஆணையாளர் பதவியும், நான்கு நன்நடத்தை அலுவலர் பதவியும் உள்ளடங்களாக 22 வெற்றிடங்களை நிரப்பியிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |

### 1.5.12.1 சமூக சேவை நிதியம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1994 இன் 04 இலக்க சமூகசேவை நிதியத்தை உருவாக்குவது தொடர்பான பிரகடனத்தின் 06 ஆம் பிரமாணத்தின் மூலம் குறிப்பிட்டதன் பிரகாரம் உதவியற்ற மற்றும் ஊனமுற்ற பிள்ளைகளிற்காக வழங்க முடியுமான போசாக்கு மற்றும் கல்வி நிவாரணம் வழங்க நிதியம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், மீளாய்வாண்டு இறுதியில் நிதியத்தின் பண மீதி ரூபா 77,943,752 ஆனது | போசாக்கு நிவாரணம் மற்றும் கலவி நிவாரணத்திற்காக கோரிக்கை கிடைக்காததுடன், அதற்காக கோரிக்கை கிடைக்குமாயின் அதனை நிரைவேற்ற நடவடிக்கை எடுக்கிறேன். | பிரகடனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.13 தலைப்பு 840 – கல்வி, தகவல் தொழிநுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கே/அபேபுஸ்ஸ மகாவித்தியாலயத்தின் தொழிநுட்ப கட்டிடத்தை நிர்மாணிக்க சபரகமுவ மாகாண கல்வி அமைச்சினால் 2017 ஜனவரி 23 திகதி | எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஒப்பந்ததாரருக்கு | ஒப்பந்த தாமதம் தொடர்பாக பெறுகைகள் வழிகாட்டிக் |

| | | | |
|---|---|---|---|
| | தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா 20,833,115 ஆன வேலைப் பெறுமதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் 2017 ஒக்டோபர் 15 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், ரூபா 1,041,656 ஆன செயல் நடவடிக்கை பிணைமுறி 2019 ஒக்டோபர் 18 திகதி காலாவதியாகி இருந்தது. மேலும், ரூபா 6,249,934 முற்பணமாக செலுத்தியிருந்ததுடன் அவற்றில் ரூபா 4,066,315 இனை தீர்த்திருக்கவில்லை. எவ்வாறாயினும் முற்பண பிணைமுறியும் 2020 மார்ச் 31 திகதி காலாவதியாகியிருந்தது. | அறவித்துள்ளதுடன், அசாத்திய பதிவேட்டிற்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கோவையின் ஏற்பாடுகளிற்கு இணங்க நடவக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பலங்கொட, எம்பிலிபிடிய, நிவித்திகல, தெஹிஓவிட்ட, மாவனல்ல மற்றும் கேகாலை கல்வி வலையங்களில் ஒரே பாடசாலையில் 15 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய 54 அதிபர்களும், 10 ஆண்டுகளிற்கும் 15 ஆண்டுகளிற்குமிடையிலான காலம் சேவையாற்றிய 86 அதிபர்களும், 08 ஆண்டுகளிற்கும் 10 இற்குமிடையிலான கால வீச்சளவில் சேவையாற்றிய 130 அதிபர்களும் இடமாற்றம் பெறாது தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | முறையான இடமாற்ற கொள்கை ஒன்றை மதிப்பிற்குறிய ஆளுனருக்கு முன்வைத்துள்ளதுடன், அது அங்கீகரிக்கப்பட்டவுடன் இடமாற்றம் செய்ய முடியுமாகும். | அதிபர் சேவையில் இடமாற்றம் காலரீதியாக மேற்கொள்ள வேண்டும். |

## 1.5.14 தலைப்பு 841 – கல்வித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத் திட்டத்தின் கீழ் 2017 ஆண்டில் மாவனல்ல மற்றும் நிவித்திகல கல்வி வலையங்களில் 03 | 2014 ஆண்டின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணம் | கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்னர் முறையான சாத்தியப்பாட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பாடசாலைகளில் கூட்டுத்தொகை ரூபா 4,983,545 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மலசல கழிவுத் தொகுதிகள் மண்சரிவு அபாயம் மற்றும் உரிய பராமரிப்பு இல்லாத காரணத்தால் 2017 மற்றும் 2018 ஆண்டு முதல் பயன்படுத்தாது காணப்பட்டன. | மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன், தற்போது மண்சரிவு அயாயம் காரணமாக பாடசைலைகள் மூடப்படுவதன் மீது இந்நிலைமை ஏற்பட்டள்ளது. | ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டியதுடன், பராமரிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் மாகாணத்தில் ஒவ்வொறு கல்வி வலையத்திற்குமிடையில் 3,319 ஆசிரியர் பற்றாக்குறையும், 1,832 ஆசிரியர் மிகையும் காணப்பட்டதில் ஆசிரியர் எண்ணிக்கையில் சமப்படுத்தல் மேற்கொள்ளும் இயலுமை இருந்த போதும், அவ்வாறு மேற்கொள்ளாதமை அவதானிக்கப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வலயங்களிற்கிடையில் ஆசிரியர் சமப்படுத்தல் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | தெஹிஒவிட்ட, இரத்தினபுரி மற்றும் எம்பிலிபிடிய வலைய கல்வி காரியாலயத்திற்கு சொந்தமான 341 உத்தியோகபூர்வ விடுதிகளில் 99 பயன்படுத்த முடியாத விடுதிகளும், வசிப்பிடம் அல்லாது வேறு பாடசாலை செயற்பாடுகளிற்கு பயன்படுத்தும் 18 விடுதிகளும் 02 அனுமதியற்ற வதிவாளர்கள் உள்ள விடுதிகளும் காணப்பட்டன. | பயன்படுத்த முடியாத விடுதிகளை உடைத்து அகற்றவும் திருத்த வேண்டிய விடுதிகளை திருத்தவும் அனுமதியற்ற வசிவாளர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ விடுதிகளை பராமரித்து பாதுகாத்துக் கொள்ளவும் ஆக்கபூர்வமாக பயன்படுத்தவும் முயற்சிக்க வேண்டும். |
| (ஈ) | சபரகமுவ மாகாண சபையின் நிதி விதிக் கோவையின் நிதி விதி 59 பிரகாரம் சாதாரண கட்டுப்பாட்டு வேலைத் திட்டத்தின் கீழ் இடம்பெற்ற ரூபா 97,080 ஆன நட்டத்தையும் இரண்டாம் நிலை கல்வியின் கீழ் 17 பாடசாலைகளில் ஏற்பட்ட ரூபா 1,035,156 ஆன நட்டத்தையும் அறவிட மற்றும் ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிவழிக்க நடவடிக்கை எடுக்க அறிவிக்கிறேன். அவ்வாறான கைத்தவறுகள் இடம்பெறாது பொறுப்பேற்கிறேன். | நிதி விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.15 தலைப்பு 850 – காணி, மாகாண நீர்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடி விவகார அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண காணி அமைச்சின் கீழ் சபரகமுவ மாகாணத்தினுள் காணப்படும் 33 பயன்பாட்டு நீர் தேக்கங்களில் இரத்தினபுரி மாவட்டத்தில் காணப்படும் 05 பயன்பாட்டு நீர் தேக்கங்கள் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி பரிசோதனைகளின் போது நீண்ட காலமாக சேற்றுப் படிவுகள் அகற்றப்படாததால் பயன்பாட்டு நீர் தேக்கங்களின் நீர் கொள்ளலவில் குறைவு ஏற்பட்டுள்ளதால் மீன் உற்பத்தியை அதிகரிக்க அந் நீர்தேக்கங்களை சுத்தம் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. அவ்வாறே சேற்றுப் படிவுகளை அகற்றி பராமரிக்காததால் அந்நீர் தேக்கங்களின் மொத்த கொள்ளலவையும் தற்போது பயன்படுத்த முடியாத நிலைமை காணப்பட்டது. | இரத்தினபுரி மாவட்டத்தில் பெறும்பாலான பயன்பாட்டு நீர்தேக்கங்களின் உரிமை நீர்பாசன திணைக்களத்திற்கு மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படுவதால் சேற்றுப் படிவுகளை அகற்ற அந்நிறுவனங்களிடம் ஏதேனும் வேலைதிட்டங்கள் காணப்படுகின்றனவா என விசாரித்து அவ்வாறு இல்லையெனின் அமைச்சுடன் திட்டமொன்றை தயாரித்து அதற்கான ஒதுக்கீட்டை ஆணைக்குழுவிடம் கோரிக்கைவிட எதிர்பார்க்கிறேன். | நன்நீர் மீன்பிடி கைத்தொழிலை மேன்படுத்த மாகாணத்தினுள் காணப்படும் நீர்தேக்கங்களின் தகவல்களை ஒன்று திரட்டி அந் நீர்தேக்கங்களை பராமரிக்க பொருத்தமான திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். |

## 1.5.16 தலைப்பு 851 – காணி ஆணையாளர் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கலவான பிரதேச செயலக பிரிவின் குகுளேகம வடக்கு மற்றும் தபஸ்தரகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் முறையே ரூட் 03 மற்றும் ஒரு ஏக்கர் விசாலமான இரண்டு காணிகள் வருடாந்த அனுமதிப்பத்திரம் | இது தொடர்பாக தற்போதைய முன்னேற்றம் மற்றும் எடுத்துள்ள நடவடிக்கைகளை அறிக்கையிடுமாறு கலவான பிரதேச செயலாளரிற்கு | பிரதேச செயலாளரை கொண்டு காணி ஆணையாளரின் கட்டளையை நடைமுறைப்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் மற்றும் ஜயபூமி உரிதியின் மூலம் தனியார் தரப்பினருக்கு வழங்கியிருந்ததுடன், அத்தரப்பினரால் காணிகளிலிருந்து முறையே 15 பர்சஸ் மற்றும் 20 பர்சஸ் காணித்துண்டுகளை தனியார் நிறுவனமொன்றின் தொலை தொடர்பு கோபுரம் நிர்மாணிக்க 10 வருடங்களுக்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மாகாண காணி ஆணையாளரின் 2012 செப்டம்பர் 27 திகதிய இலக்கம் பீஎல்சீ 10 கொண்ட கடிதம் மூலம் கலவான பிரதேச செயலாளரிற்கு ஒப்படைப் பத்திரத்தை அரசிற்கு பொறுப்பேற்கவும் தொலை தொடர்பு கோபுரம் நிர்மாணிப்பதுடன் தொடர்பான காணித் துண்டுகளை நீண்ட கால அனுமதிப்பத்தரம் மூலம் அந் நிறுவனங்களிற்கு பெற்றுக் கொடுக்க உத்தேசம் முன்வைக்குமாறு அறிவித்திருந்த போதும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | நிவிதிகல பிரதேச செயலக பிரிவில் மற்றும் கலவான பிரதேச செயலக பிரிவில் காணிகளில் தனியார் நிறுவனமொன்றினால் நிர்மாணித்திருந்த கொஸ்வது கங்கை சிறியளவிலான மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் தொடர்பில் நிவிதிகல பிரதேச செயலாளரனால் 2017 ஏப்ரல் முதல் 2021 ஏப்ரல் வரையான காலப் பகுதிக்காக அறவிட வேண்டிய நீர் கட்டணம் ரூபா 1,500,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை பணம் செலுத்துதல் தொடர்பில் குறித்த நிறுவனத்தை அறிவூட்டியுள்ளதுடன் எதிர்காலத்தில் அந் நிலுவை பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | நீர் குத்தகை பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிவிதிகல பிரதேச செயலக பிரிவில் 03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 05 காணித் துண்டுகளை நீண்ட கால குத்தகை வழங்க மாகாண காணி ஆணையாளரின் அனுமதி கிடைத்திருந்தது. எவ்வாறாயினும் | ஒரு நபரிற்கு உரிய பணத்தை அறவிட்டு காணியின் உடமையை ஒப்படைத்துள்ளதுடன் மற்றைய நபர்களிற்கு குத்தகை பணம் செலுத்த | காணிகளை நீண்ட கால குத்தகை வழங்கி உரிய குத்தகை பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அனுமதி கிடைத்து கணக்காய்வு திகதியன்று 01 ஆண்டு முதல் 05 ஆண்டு காலம் வரை அக் காணிகளிற்காக நீண்ட கால குத்தகை வழங்கி உரிய குத்தகை பணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டள்ளது. | |

### 1.5.17 தலைப்பு 852 – விவசாய திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கரபிஞ்ச கிராமத்தில் அமைந்துள்ள இரத்தினபுரி மாவட்ட விவசாய பயிற்சி மத்திய நிலையத்திற்கு சொந்தமான 02 இரட்டை தொழிலாளர் விடுதிகள் 10 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து அனுமதியற்ற வதிவாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. | விரைவில் அனுமதியற்ற வதிவாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.18 தலைப்பு 853 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதி பணிப்பாளர் பதவி உட்பட 49 பதவி வெற்றிடங்களை நிரப்ப மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களிற்காக ஆட்சேர்ப்பு செய்யுமாறு மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |